1973 நவம்பர் 27]

Research on soil bacteria

* 436 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Agricultural University at Coimbatore for the mass production of soil bacteria; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) காற்றிலுள்ள நைட்ரஜனை பயிர்களின் வேர் முடிச்சுகளாக ஆக்கவல்ல 'ரேசோபியா' என்ற பாக்டீரியா நுண்ணுயிர் இப்பொழுது தூள் வடிவில் உற்பத்தி செய்யப்படுகிறது. காஞ்சிபுரம், ஆடுதுறை, மதுரை, கோயில்பட்டி ஆகிய இடங்களிலிருந்த உற்பத்தி நிலையங்கள் ஒருங்கிணைந்து கோவையில் பெரிய உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டு அதற்குத் தேவையான இயந்திரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஏக்கருக்கு ரூ. 5 செலவில் இந்த 'ரேசோபியா' தூள்களை விதையுடன் சேர்த்து விதைத்தால் 20 கிலோ முதல் 90 கிலோ வரை நைட்ரஜன் நிலத்தில் சேர்ந்து உரமாகும்.

Selection of students for Veterinary Science Course

* 437 *Q.*—THIRU K. KANDASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) the number of candidates who applied for admission to the Madras Veterinary College during 1973-74;

(*b*) the number among them selected ; and

(*c*) the number among those selected belonging to the Backard Classes?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) 853.

(இ) 120.

(உ) 65.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டரினரி கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கப்படுகிற நோத்தில், பிற்பட்ட இன மாணவர்களை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் சேர்க்கிறார்கள். சேர்க்கப்படுகிற எண்ணிக்கை மிக அதிகமாக

இருப்பதாலும், அவர்களுக்கு கிடைக்கக்கூடிய சலுகை குறைவாக இருப்பதாலும் எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்த அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்ததாக, அந்த மாணவர்கள் மிருக வைத்திய சாலைகளில் பயிற்சிக்காகச் சேர்க்கப்படுகிற நேரத்தில், கிராமப்புறங்களில் பாம்பரை விவசாயக் குடும்பங்களிலிருந்து வருகிற, குறிப்பாக ஆடுமாடுகளை எழுந்தவுடனே வணங்கக்கூடிய குடும்பங்கள் இருக்கின்றன பெரும்பாலும், அப்படிப்பட்ட குடும்பங்களிலிருந்து வருபவர்களுக்கு அதிகச் சலுகை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, பின் தங்கியவர்களுக்கு 31 சதவிகிதம் ரிசர்வ் செய்யப் பட்டிருக்கிறது. மொத்த எண்ணிக்கையில் 31 சதவிகிதம் என்பதால், 120-ல் 37 பேர்தான் ரிசர்வில் வரமுடியும். ஆனல், இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டதோ, 65 பேர்கள். ரிசர்வ் பண்ணின பகுதி போக, பொதுத் தேர்விலும், பின் தங்கியவர்கள் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள் என்பது இதிலி ருந்து புலனுகிறது. இப்போது 31 சதவிகிதம் பின் தங்கியவர் களுக்கும், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஆக 49 சதவிகிதம் ஆகிறது—பாதிக்கு மேல் ரிசர்வ் பண்ணுவது அவ்வளவு சரியாக இருக்காது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1973–74-ம் வருடத்திற்கு மெட்ராஸ் வெட்டரினரி காலேஜுக்கு அப்ளிகேஷன்ஸ் போட்ட பையன்கள் சம்பந்தப்பட்டு, மே மாதத்திலே புதிய உத்தரவு போடப்பட்டு, ஏற்கனவே எந்தவிதமான குவாலிஃபிகேஷன்ஸ் இருந்தால் போதுமோ, அதற்கு மாருக வேண்டுமென்று போட்டதால், மாணவர்கள் கஷ்டப்பட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இனியாகிலும், ஏற்கனவே அனுப்பியதற்குப் பிறகு அதை மாற்றக் கூடிய முறையில் இல்லாத அளவுக்கு அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : முதலிலே சி வகுப்பு என்ற அளவுக்கு அவர்கள் மார்க் எடுத்தாலும் போதும், அவர்கள் மனு செய்துவிடலாம் என்று இருந்தது. அதற்குப் பிறகு

1973 நவம்பர் 27]

பி கிரேட், 100-க்கு 50-வது இருந்தால்தான் அவர்கள் இன்டர்வியூவுக்கு, பேட்டிக்கு அழைக்கப்படுவார்கள் என்று மாற்றப்பட்டது. ஆனால், அப்படி வைத்தும் 850 பேர் வந்திருக்கிறார்கள் 120 இடங்களுக்கு. அவ்வளவு பேரையும் அழைத்து, மாணவர்களுடைய நேரத்தையும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவினுடைய நேரத்தையும் வீணாக்க வேண்டாமென்று கருதுகிறேன்.

கிழாய் ஊராட்சியில் கால்நடை மருத்துவ மனைக் கட்டடம்

*438 **திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் கிழாய் பஞ்சாயத்துப் பகுதியில் கால்நடை மருத்துவமனை கட்டும் பணி எப்போது துவங்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1971-ம் ஆண்டு சனவரி மாதம் தொடங்கப்பட்டது.

ஒன்றியப் பள்ளிகளில் சுகாதார வசதிகள்

*439 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் சுகாதார வசதி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஊராட்சி ஒன்றிய பொது நிதியில், மூன்று இலட்ச ரூபாய்களுக்கு மேல் உபரி நிதி இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் பொது நிதியிலிருந்து பள்ளிகளில் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பரிசீலனை எப்பொழுது முடியும்? ஆரம்பத்தில் எத்தனை பள்ளிகளுக்கு இந்த வசதி வாய்ப்பளிக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று அறியலாமா ?